Registered as a Newspaper

★ பாஸ்போட், தேசிய அடையாள அட்டைப் படங்கள் ★ Enlargement, குறைந்தவிலையில் தரமாக, விரைவாகப் பெற நாட வேண்டிய இடம்
SARMILA
★ PHOTO ★
302, Point Pedro Road, Nallur — Jaffna.

# உதயன்

விலை ரூ. 1-25

உயிரோவியமான சறுப்பு/ வெள்ளை - கலர் உட்புற வெளிப்புற படப்பிடிப்பு செய்தல். பிலிம்ரோல் - அல்பம் விற்பனை
சர்மிளா போட்டோ
302, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 26 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 15 (11 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 220

# ஆயுதங்கள் ஒப்படைப்பதை புலிகள் மறுபரிசீலனை செய்வர்

## ஒப்பந்தத்தை படைகள் மீறுவதாகக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 11

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர். ஆயுதங்களை ஒப்படைப்பதை மறுபரிசிலனை செய்யவுள்ளனர்.

கிழக்குமாகாணத்தின் பல இடங்களிலும், அரசாங்கப் படைகள் ஒப்பந்தத்தை மீறி, பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகக் குற்றம் சாட்டியே புலிகள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

அரசாங்கப்படைகள் ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருப்பது போல யுத்தநிறுத்தத்தைச் சரிவரக் கடைப்பிடிக்கவில்லை. அதனால் அரசின் போக்கில் எமக்குச் சந்தேகம் பிறக்கிறது. ஆகையால் நாமும் ஆயுதங்களை ஒப்படைப்பதை மறுபரிசீலனை செய்ய உள்ளோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. இ. திலீபன் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அறிவித்தார்.

ஸ்ரீ லங்கா அரச படைகள் தொடர்ந்தும் தமிழ் மக்களை தாக்கி வருவதையும், கொன்று வருவதையும், எமது பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி வருவதையும் ஊர்காவல் படை மூலம் அப்பாவி மக்கள் தாக்கப்பட்டு வருவதையும் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம் —

ஆனால் ஸ்ரீ லங்கா அரசின் ஆயுதப் படைகள் தொடர்ச்சியாக இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன —

எனவே ஸ்ரீலங்கா அரசு போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் போக்கில் நாம் பலத்த சந்தேகம் கொள்ளவேண்டியுள்ளது —

நேற்றும் மூதூரில் உள்ள சம்பூர் இராணுவ முகாமில் ஸ்ரீலங்கா இராணுவம் பொதுமக்களைத் தாக்கியுள்ளது. தோப்பூர் இராணு முகாமுக்கு எதிரே உள்ள பிரதான வீதியால் செல்லும் பொதுமக்களும் கடும் சோதனைக்கு ஆளாக்கப் படுகிறார்கள் —

ஸ்ரீ லங்கா இராணுவம் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்வதனால் ஆயுதங்களை ஒப்படைப்பது குறித்து நாம் மறு பரிசிலனை செய்ய உள்ளோம் — என்று திரு. திலீபன் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (அ-10)

## புலிகள், ஈரோஸ் உறுப்பினர் நால்வர் கொலை

### தடைசெய்யப்பட்ட 2 இயக்கங்கள்மீது கண்டனம்

யாழ்ப்பாணம், ஆக. 11

விடுதலைப் புலிகள், ஈரோஸ் ஆகியவற்றைச் சேர்ந்தநான்கு போராளிகள் தடைசெய்யப்பட்ட ஈ. பி. ஆர். எல். எப், புளொட் இயக்கங்களின் உறுப்பினர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நேற்றும் நேற்று முன் தினமும் திருமலை, உயிலங்குளம் பகுதிகளில் இடம்பெற்றதாம்.

திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளரான செல்வம் (செல்வகுமார்) ஈ. பி. ஆர்.எல்.எவ் இயக்கத்தினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

உயிலங்குளம் பகுதியிலும் மூன்று பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் விடுதலைப்புலிகள் தெரிவிக்கின்றனர்.

உயிலங்குளத்தில் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த 275 பேர் ஆயுத பாணிகளாகத் திரிகின்றனர் என்றும் இவர்களின் தலைமை அலுவலகம் குஞ்சுக்குளத்தில் உள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றர்.

உயிலங்குளத்தில் கொலை செய்யப்பட்ட மூவரில் ஒருவர் ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்தவம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புளொட் இயக்கத்தின் குழுவுக்கு சங்கிலி என்பவரே தலைமை வகிக்கின்றார்.

இவர் புளொட் இயக்கத்தில் சித்திரவதைக்கு பிரசித்தி பெற்றவர் என்றும் சுழிபுரம் படுகொலைக்கு காரணமானவரென்றும் புலிகள் தெரிவிக்கின்றனர். (அ-10)

### சுபநேரம்

11-8-1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10 34 முதல் 12 04 வரை
ராகுகாலம்:-
3 04 முதல் 04.34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

LANKA CEMENT LTD.
லங்கா சிமெந்து நிறுவனம்
அறிவித்தல்
லங்கா சிமெந்து லிமிட்டெட் சகல ஊழியர்களுக்கும் துறைமுகப்பகுதி ஊழியர்களுக்கும்
மேற்படி தொழிற்சாலையும் துறைமுகப் பகுதியும் மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட இருப்பதால் கடமையாற்றும் சகல ஊழியர்களும் எதிர்வரும் 12-08-87 (புதன்கிழமை) மு. ப. 8-30 மணிக்கு சமுகம் கொடுக்குமாறு வேண்டுகிறோம்.
பிரதிப்பொதுமுகாமையாளர்
லங்கா சிமெந்து நிறுவனம்.
காங்கேசன்துறை.

முச்சந்தி முரளி



இடைக்காலநிர்வாகம் எண்டும் நிரந்தர அரசு எண்டும் சொல்லுகினம். எல்லாத்துக்கும் ஒப்பந்தம் பார்லிமெண்டிலை நிறைவேற வேணுமே...!

## நோர்வே செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஆக. 11

இராணுவத் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ள பல பகுதிகளை நேற்று நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நால்வர் பார்வையிட்டனர்.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கக் குழுவுக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் நாயகம் திரு. ஓட் ருன் தலைமை வகித்தார,

இவர்களுடன் ஸ்ரீ லங்கா செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. பந்துல அபயசேகராவும் வந்திருந்தார்.

நேற்று விமான மூலம் பலாலியில் வந்திறங்கிய இவர்கள், அங்கிருந்து வடமராட்சிக்குச்சென்று ''ஒப்பறேஷன் லிபறேஷ''னின்போது பாதிப்புக்குள்ளான பல பகுதிகளையும் பார்வையிட்டனர்.

வல்வெட்டித்துறை அகதி முகாம் ஒன்றுக்குச் சென்ற இவர்கள், அங்கு 45 குடும்பங்களுக்கு உடுபிடவைகள் வழங்கினர்.

அதன் பின்னர் யாழ் நகர் வந்து யாழ் நகரில் மிகவும் மோசமாக இராணுவத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட குருநகர், டாஷையூர், கொட்டடி, பண்ணை, நகர மையப் பகுதிகளையும் பார்வையிட்டனர்.

யாழ் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து ஷெல் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட 19ஆம்வார்டையும் பார்வையிட்டனர். (இ-ஓ-10)

## இடைக்கால நிர்வாகம் ஜே.ஆர்-டிக்ஸிற் பேச்சு

கொழும்பு, ஆக. 11

வடக்குக்—கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து, இந்தியத் தூதுவா திரு. கே. என். டிக்ஸிற் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை நேற்றுச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

இடைக்கால நிர்வாகத்தை விரைவில் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், ஒப்பந்தச்சட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் திரு. டிக்ஸிற் வலியுறுத்தியதாக அறியவந்தது.

போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கும் செயற்பாடு துரித முன்னேற்றம் கண்டுவருவதாக திரு. டிக்ஸிற் ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கினார் என்று அறியப்படுகிறது. (அ)

## ஈ. பி. ஆர். எல். எவ். போராளிகள் விடுதலை

கொழும்பு, ஆக. 11

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் கடத்தப்பட்டதாக கருதப்பட்ட 13 ஈ.பி.ஆர்.எல். எப்.போராளிகளும் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

இந்திய அமைதிப் படையினரின் முயற்சியைத் தொடர்ந்து தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கம் இவர்களை விடுவித்ததாக பி. பி. சி. நேற்று இரவு அறிவித்தது.

கடத்தப் பட்டவர்கள் விடுவிக்கப் படவேண்டும் போராளிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் அப்போதுதான் ஆயுதங்களை ஒப்படைப்போம்'' என்றுஈ.பி.ஆர். எல்.எவ்.இயக்கம் அறிவித்திருந்தது தெரிந்ததே

இப்படிபி.பி.சி.மேலும் தெரிவித்தது. (இ-எ)

### வேலை நிறுத்தம் முடிவடைந்தது

கொழும்பு, ஆக, 11

டாக்டர்களின் வேலை நிறுத்தம் முடிவடைந்ததாக அரசாங்கம் நேற்று அறிவித்தது. (இ-எ)

## ஈரோஸ், ரெலோ இரண்டும் ஆயுதங்களை ஒப்படைக்குமாம்

சென்னை. ஆக. 11

ஈரோஸ், ரெலோ இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைக்க உள்ளன என்று சென்னையில் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக ஈரோஸ் இயக்கப்பிரமுகர் வேலுப்பிள்ளை பாலகுமார் இரண்டு மூன்று தினங்களில் யாழ் செல்வார் என்றும், ரெலோ தலைவர் ஏ. செல்வமும் விரைவில் யாழ் செல்ல உள்ளார் என்றும் சென்னையில் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே ரெலோ போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டனர் என்ற செய்தி தவறு என்றும் இனித்தான் தனது இயக்கப் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைப்பர் என்றும் திரு. செல்வம் தெரிவித்தார். (இ-எ)

### மக்கள் கருத்தை புலிகள் கோருகின்றனர்

யாழ்ப்பாணம் ஆக. 11

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்ற நிலமை சம்பந்தமான அபிப்பிராயங்களை தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ''தமிழீழ மக்கள் தமது தலைவருடன் நேரடியாக தொடர்பு கொண்டு தமது ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் தெரிவிக்கலாம்''எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான கடிதங்களை தலைவர் பிரபாகரன் என எழுதி 'புலிகளின் குரல்' பெட்டிகளில் போடுமாறும் புலிகள் கேட்டுள்ளனர். (இ 10)

### தலைமன்னார் கப்பல் சேவை

கொழும்பு, ஆக. 11

தலைமன்னார்—இராமேஸ்வரம் கப்பல்சேவையை மீண்டும் ஆரம்பிப்பதுசம்பந்தமாக போக்குவரத்து அமைச்சு தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

இது தொடர்பாக இந்திய அரசாங்கத்துடனும் இந்திய கப்பல் கம்பனியுடனும் போக்குவரத்து அமைச்சு தொடர்பு கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வுத் திட்டம்

### யாழ் செயலக திட்டமிடல் பகுதி விவரம் சேகரிக்கிறது

யாழ்ப்பாணம். ஆக 11

பாதிப்புற்றோருக்கான புனர் வாழ்வு திட்டத்துக்காக பாதிப்புற்றவர்களிடம் இருந்து யாழ் செயலக திட்டமிடல் பகுதியினரால் விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.

1986 அக்டோபர் 1ஆம் திகதி தொடக்கம் 1987 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் பாதிப்புற்ற பொது மக்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கானபடிவங்களை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் 19-8-1987 முதல் விநியோகிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் படுகின்றன.

படிவங்களை நிரப்பிக் கொடுப்பதற்கானஇறுதி நாள் செப்டெம்பர் இரண்டாம் திகதி ஆகும் (இ-ஓ-10)

### அச்சுவேலியிலும் இந்தியப்படை முகாம்

அச்சுவேலி. ஆக. 11

அச்சுவேலி புனித திரேஸா மகளிர் கல்லூரி விடுதிக்கு அருகில் உள்ள அச்சுவேலி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இந்திய அமைதிப் படையினர் முகாமிட்டுள்ளனர்.

அச்சுவேலியில் முகாமிட்டுள்ள இந்திய அமைதிப்படை மற்றும் ரெஜிமண்ட் பிரிவைச் சேர்ந்ததாகும்.

மகாவித்தியாலய மைதானத்தில் 10 க்கு மேற்பட்ட கூடாரங்கள் அமைக்கப்பட்டு அதில் நூற்றுக்கு மேற்பட்ட அமைதிப் படையினர் தங்கியுள்ளனர். (இ-11)

### யாழ் ரயில் நிலையத்திலிருந்து வெளியேறினர்

குருநகர். ஆக. 11

கடந்த சில மாதங்களாக யாழ் ரயில் நிலையத்தில் தங்கி இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட அகதிக் குடும்பங்கள் வெளியேறிவிட்டன.

அகதிகள் வெளியேறியதைத் தொடர்ந்து ரயில் நிலையச் சுற்றுடல் சுத்திகரிக்கப்பட்டு திருத்த வேலைகளுக்கு ஆயத்தப்படுத்தப்பட்டு வருகிறது, (இ-51)

### பத்திரிகை தணிக்கையை எதிர்த்து மனு

கொழும்பு. ஆக 11

பத்திரிகைத் தணிக்கையை எதிர்த்து பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு உயர் நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்றுக்கொண்டது (இ-எ)

### மட்டக்களப்பில் ஆயுதங்கள் ஒப்படைப்பு

மட்டக்களப்பு, ஆக 11

மட்டக்களப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களை நேற்று ஒப்படைத்தது

அடையாளமாக சில ஆயுதங்களை புலிகள் இயக்கப் போராளிகள் ஒப்படைத்தனர்

இந்திய மேஜர் ஜெனரல் ஹர்கிர்சிங் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். (இ-எ)

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை
அறிவித்தல்
10-08-1987 கடமைக்கு பிரசன்னமாக இருந்த ஊழியர்களும் கீழே குறிப்பிடப்பட்ட காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களையும் 12-08-1987 தொடக்கம் தினசரி காலை 8-00/8 30 மணிக்கு வேலைக்கு வருமாறு வேண்டப்படுகின்றனர்.
1. முகாமையாளர்கள் (Foremen)
2. உதவி எரியூட்டினர் / முறைமாற்று எரியூட்டினர். (Assist Burners/Shift Burners)
3 சிமெந்து அடைப்பு நிலைய ஊழியர்கள் (புதிய/பழைய)
4. சிமெந்து அடைப்பு நிலைய இயந்திரப் பொருத்துனர் (Mechanical Fitters)
5. வாகனப்பராமரிப்பு மேற்பார்வையாளர் (Vehicle Maintenance Charge Hands)
6. முறைமாற்று இரசாயனர், இரசாயன உதவியாளர். (Shift Chemist / Laboratory Attendants)
7. பொதுவேலைப்பகுதி நீர் விநியோக உதவியாளர். (Pump Attendant Civil)
8. களஞ்சிய பொறுப்பாளர் / களஞ்சிய உதவியாளர் (Storekeepers / Storeman)
9. உள்ளக கணக்குப் பரிசோதக ஊழியர்கள் Internal Audit Staff)
10. விற்பனைப்பகுதி ஊழியர்கள் (Sales Staff)
11. இலிகிதர்கள்
12. சிமெந்து தொழிற்சாலை ஏவலாளர்கள் Peons — All Sections
13. போசனசாலை ஊழியர்கள் அனைவரும்
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை
தொழிற்சாலை முகாமையாளர்
காங்கேசன்துறை 10-08-1987

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரம் ★

விற்பனைக்கு

சண்ணதாசன்' C. N. அண்ணாத்துரை, டாக்டர் உதயமூர்த்தி போன்றோரின் பல அரிய நூல்கள் தற்போது விற்பனையாகி வருகின்றது. நல்லூர் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

நல்லைநகர் நூல் யாழ்ப்பாண இராச்சியத்தினதும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலினதும் வரலாறு கூறும் ஆய்வு நூல் சந்தையா குணராசா எம். ஏ. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். யாழ்ப்பாணம். (1465)

நல்ல நிறங்களில் லவ் பேர்ட்ஸ் விற்பனைக்குண்டு 114, 3 ஆம் குறுக்குத் தெரு, மணிப்புரி, கொழும்புத்துறை. (1466)

### அறிவித்தல்

ராஜன் புத்தகசாலை மீண்டும் தனது பழைய இடத்துக்கு இடம் மாறி விட்டது என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறோம். ராஜன் புத்தகசாலை 12, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். சகல விதமான இலங்கை, இந்திய வார மாத சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் பெறலாம். (1458)

### மணப்பந்தல்

யாழ் இந்து வேளாள பிரசா உரிமை பெற்ற கனடா என்ஜினியருக்கு பெண் தேவை. யாழ் வேளாள ரோமன் கத்தோலிக்க 25 வயது நிரம்பிய மணப்பெண்ணுக்கு என்ஜினியர் அல்லது டாக்டர் மணமகன் தேவை. நல்ல சீதனம் கண்டி ரோட்டில் வீடு, வளவுடன் கொடுக்கப்படும். தொடர்பு: A B C D E விவாகப் பொருத்துனர் 91/16, இந்து மகளிர் லேன், கந்தர்மடம். (1466)

எனது ஸ்தாபனத்தில் தாமிழந்த விவாகரத்து முடித்த ஆண் பெண்களின் சாதகங்கள் உண்டு இத்திருமணத்தை விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். மேலும் கீழ் குறிப்பிட்ட வெளிநாடுகளில் மணப்பெண்கள் தேவை. கனடா, டென்மார்க், ஜேர்மனி. பிரான்ஸ், நோர்வே, தொடர்பு A B C D E விவாகப்பொருத்துனர்:- 91/16, இந்து மகளிர் லேன், கந்தர்மடம். (1466)

# பண்ணை போக்குவரத்து மீண்டும் ஆரம்பமானது

## எனினும் அராலி கடற்பாதை அமைப்பு வேலைகள் தொடர்ந்து நடைபெறும்

வேலணை, ஆக. 11

15 மாதங்களாகத் தடைப்பட்டிருந்த தீவுப் பகுதிக்கான யாழ்-பண்ணை போக்குவரத்து நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

நேற்று இப் பாதை திறக்கப்பட்டதும் தீவுப் பகுதி தனியார் போக்குவரத்து வாகனங்கள் அனைத்தும் யாழ் - பண்ணை வீதியையே பயன்படுத்தின.

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து அராலித்துறை முகத்திற்கு இதுவரை காலமும் போக்கு வரத்தில் ஈடுபட்ட தனியார் வாகனங்கள் யாவும் யாழ் - பண்ணை பாதையையே பயன்படுத்துகின்றன.

இப் பாதை திறக்கப்பட்டதால் ஏராளமான தீவுப்பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் பயணம் செய்வதை நேற்றுக் காணக் கூடியதாக இருந்தது.

இது இவ்வாறிருக்க தீவுப்பகுதிக்கான அராலி கடல் பாதை அமைப்பு வேலைகள் தொடர்ந்தும் நடைபெறும் என தீவுப் பகுதி பாதை அமைப்புக் குழுவினர் தெரிவிக்கின்றனர். (இ-167)

### சேதங்களைப் பார்வையிட கூட்டம்

வடமராட்சி, ஆக. 11

ஸ்ரீ லங்கா இராணுவக் கெடுபிடிகளில் வடமராட்சியில் குறிப்பாக வல்வெட்டித்துறையில் ஏற்பட்டுள்ள பெரும் சேதங்களைப் பார்வையிடுவதற்காக தினமும் பெரும் எண்ணிக்கையானோர் இப்பகுதிக்கு வந்து கூடுகின்றனர்.

இவர்களில் பலர் வீடியோ மூலமும், கமரா மூலமும் சேதங்களைப் படம் பிடித்து வருகின்றனர். (உ-160)

## அரச ஊழியருக்கு விரைவில் சம்பள உயர்வு

கொழும்பு, ஆக. 11

குறிப்பிடத்தக்க சம்பள உயர்வு அரச ஊழியருக்கு விரைவில் வழங்கப்படும்.

இப்படி நிதி அமைச்சர் ரோனி டி மெல் சொன்னார்.

புளத்சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்,

இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றி புளத்சிங்கள ஐ தே க கிளைகளின் உறுப்பினர்களுக்கு நிதி அமைச்சரினால் விளக்கமளிக்கப்பட்டது.

நீண்டகால நலனைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதி இந்த ஒப்பந்தத்தைச் செய்தார் குறுகிய அரசியல் லாபத்தைக் காணுவது ஜனாதிபதியின் நோக்கமல்ல.

சமாதான முயற்சிகளை ஆதரிப்போர் நிச்சயம் சரித்திரத்தில் இடம் பெறுவர்.

இப்படி நிதி அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

## சின்ன வெங்காய உற்பத்திக்கு ஊக்குவிப்பு

### இறக்குமதி கட்டுப்படுத்தப்படும்

கொழும்பு, ஆக. 11

வடபகுதியில் சின்ன வெங்காய உற்பத்தியை ஊக்குவிக்கு முகமாக அதன் இறக்குமதி கட்டுப்படுத்தப்படும்.

வாத்தக அமைச்சர் எம். எஸ். அமரசிறி இதனைத் தெரிவித்தார்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் வடபகுதியில் இருந்து 3ஆயிரத்து 781 கிலோ சின்ன வெங்காயம் கொழும்பு வந்து சேர்ந்தது என்று அமைச்சர் மேலும் சொன்னார்.

வடபகுதிஉற்பத்திகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கும்படி கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கும் விற்பனவுத் திணைக்களத்துக்கும் அமைச்சர் உத்தரவிட்டிருக்கின்றார். (உ-எ)

## உ. அரச அதிபர்களுக்கு பிஸ்டல் வழங்க முடிவு

கொழும்பு, ஆக 11

உதவி அரச அதிபர்களுக்குப் பிஸ்டல்கள் வழங்கப்படவுள்ளன.

தென் இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து, உள்நாட்டு அமைச்சு இப்படித் தீர்மானித்து இருப்பதாகத் தெரியவருகின்றது.

அம்பாந்தோட்டை மாவட்ட அமைச்சில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில்பிரதி அமைச்சர் பேர்சி சமரவீர இத்தகவலை வெளியிட்டார்.

உதவி அரச அதிபருக்கு பிஸ்டலும்–

உதவி அரச அதிபர் பணிமனையைப் பாதுகாக்க துப்பாக்கியும் வழங்கப்படுமாம் (உ-எ)

### வடிசாலை கூட்டுத்தாபனத்திற்கு பெரும் நஷ்டம்

கொழும்பு, ஆக. 11

தென் இலங்கையில் அண்மையில் இடம் பெற்ற வன்செயல்கள் அரச வடிசாலை கூட்டுத்தாபனத்துக்கு ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபாவரை நட்டத்தை ஏற்படுத்தியதாக அறிவிக்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான உடைமைகளுக்குச் சேதமேற்பட்டும், சாராய விநியோகம் வழமை போன்று நடைபெறுகின்றது என்று அறிவிக்கப்படுகின்றது. (உ-எ)


## தேவை

### மனேச்சர்/உணவு பரிமாறுபவர்கள்

★ சைவ உணவகம் நடத்துவதிலும், வேலையாட்களைக் கொண்டு நடத்துவதிலும், பண்பான முறையில் நடந்து கொள்ளக் கூடியவரும், குடும்பப் பொறுப்புகள் அதிகளவு இல்லாத ஒருவர் மனேச்சராகத் தேவை. வேலைக்காகத் தொடர்பு கொள்ளும்போது சிபார்சுக்கடிதம் இணைத்துக்கொள்ளவும்.

★ தரமான பண்பான முறையில் உணவு பரிமாறும் சிப்பந்திகளும் தேவை. லீவுகள் எடுக்காது வேலையில் அக்கறையுள்ளவர்கள் தொடர்புகொள்ளுங்கள். சம்பளம் 750/-க்கு மேல். சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

★ (திறமைக்கேற்ப சம்பளம்கூட்டப்படும்.) ★

— நேரில் தொடர்பு கொள்ளவும். —

**ஞானம்ஸ் சைவ உணவகம்**

கந்தசுவாமி கோவில் வீதி,

வவுனியா.


### ஈழவர் முன்னணி நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக 11

ஞாயிறு நடைபெற்ற ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஏனைய பொது ஸ்தாபனங்களுக்கும் இஸ்லாமிய சகோதரர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இவ்வாறு ஈழவர் முன்னணி இயக்கம் தெரிவித்திருக்கின்றது.

ஸ்ரீலங்காவின் அரசியல் சதிகளை அம்பலப் படுத்துவதில் உதவியளித்துவரும் தொடர்புச் சாதனங்கள் நிதர்சனம் மற்றும் ஒளிபரப்பு நிலையங்களுக்கும் ஈழவர் முன்னணி நன்றி தெரிவித்திருக்கிறது. (உ-10)



கவிஞர் தேவதாசனால் பாடப்பட்ட "காத்தவன் காவியம்" வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

நூலின் முதல் பிரதியை இலங்கை வங்கி - யாழ்ப்பாணக் கிளையின் பிரதம முகாமையாளர் முகனரத்தினம் யாழ்ப்பாண மறைவட்ட ஆயர் மேதகு கலாநிதி. வ. தியோகுப்பிள்ளை அவர்களிடம் பெறுகின்றார் இடையில் நூலாசிரியர் கவிஞர் தேவதாசன் காணப்படுகின்றார். (இ)

### மயிலிட்டி பிரசைகள் குழு நன்றி

யாழ்ப்பாணம், ஆக. 11

சாவக்கட்டுப் பகுதியில் ஐந்து மாதங்களாக தங்கியிருக்க அனுமதித்த சாவக்கட்டு மகாத்மா சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கு மயிலிட்டிக்கரை பிரசைகள் குழு நன்றி கூறி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இது சம்பந்தமாகப் பேருதவி புரிந்த விடுதலைப் புலிகள் இயக்க மானிப்பாய்ப் பகுதிப் பொறுப்பாளர் மயூரனுக்கும் அறிக்கையில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## செய்திக்கொத்து

### வவுணதீவில் 20 சடலங்கள்?

கொழும்பு, ஆக. 11

மட்டக்களப்பு, வவுணதீவுக் கிராமத்தில் 20 தமிழர் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது

இச்சடலங்கள் அனைத்தும் அழுகிய நிலையில் காணப்பட்டன.

இதனை மட்டக்களப்பு பிரசைகள் குழுவின் பிரமுகர் ஒருவர் ஊர்ஜிதம் செய்தார். (உ-எ)

### குரக்கன், தினை பயிர்ச்செய்கை

கொக்குவில், ஆக. 11

கொக்குவில் பகுதி விவசாயிகள் நாட்டின் நெருக்கடி நிலையை உத்தேசித்து குரக்கன், தினை போன்ற தானிய வகைகளை இம்முறை பெரும் அளவு பயிரிட்டுள்ளனர்.

இதேவேளை இப்பகுதி விவசாயிகள் உற்பத்தி செய்த வெண்டிப்பயிர் நோயின் தாக்கத்தினால் எதிர்பார்த்த உற்பத்தியைத் தரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-69)

### நிவாரண உணவுப் பத்திரம் விநியோகம்

வைகாசி மாதத்திற்கான அகதிகள் நிவாரண உணவுப் பத்திரங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாத, தொண்டமனாறு கிராம சேவையாளர் பிரிவு மக்கள், உடுப்பிட்டியில் திரு. சண்முகலிங்கம், அல்லது உலககுருநாதஐயர் அவர்களை உடனடியாகத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரசைகள் குழு கேட்டுள்ளது. (உ)

### வட்டுக்கோட்டை கொத்தணிபாடசாலை ஆசிரியர் புகார்

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலை அமைப்பின் கீழ் இயங்கும் அதிகமான பாடசாலை ஆசிரியர்களுக்கு இவ்வாண்டுக்கான சம்பள உயர்வு இதுவரை வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வருடாந்தச் சம்பள உயர்வு ஏனைய வட்டாரப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கடந்த மாதமே வழங்கப்பட்டு விட்டதாம்.

சுமார் ஏழு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை தங்களுக்குரிய சம்பள உயர்ச்சி கிடைக்காதது குறித்து வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலை ஆசிரியர்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர். (உ-161)

### மீண்டும் மக்கள் வங்கி

வடமராட்சி, ஆக. 11

இராணுவக் கெடுபிடி காரணமாக இடம் மாறிய பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை மீண்டும் பருத்தித்துறையில் இயங்கவிருப் தாக அறியப்படுகின்றது.

இதற்காக வங்கி முன்பு இருந்த கட்டடத்தின் திருத்த வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. (உ-160)

### மக்கள் கலை அரங்கம்

யாழ்ப்பாணம், ஆக. 11

பல்வேறு பகுதிகளிலுமுள்ள கலைஞர்களின் பங்குபற்றலை உறுதி செய்யவும், விரைவுபடுத்தவும் மக்கள் கலையரங்கம் தன்னாலான அனைத்தையும் செய்தல் வேண்டும்

இவ்வாறான தீர்மானம் சடந்த வியாழன் மாலை நடைபெற்ற மக்கள் கலையரங்க இயக்குநர் சபையால் நிறைவேற்றப் பட்டது. (இ)

### யாழ். ஆயர் வெளிநாடு செல்கிறார்

யாழ் ஆயர் அதி.வண ம. தியோகுப்பிள்ளை கண் சிகிச்சைக்காகச் சுவிற்சர்லாந்து செல்கிறார்.

சிகிச்சையின் பின்பு பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தமிழ் அகதிகளை யாழ் ஆயர் சந்திப்பார். (ரி)

### தற்கொலை

வேலணை, ஆக, 11

ஹற்றனைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தில் வசித்து வந்த 13 வயதுச் சிறுவன் ஒருவன் அண்மையில் திருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டான். (உ-167)

## இந்திய நிவாரணத்துக்கான அனுமதிப் பத்திரம் முஸ்லிம் பகுதிகளில் இன்று முதல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ். முஸ்லிம் பகுதிக்கு இந்திய நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கான அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகின்றன.

ஏற்கனவே அரச நிவாரணத்துக்கான அனுமதிப் பத்திரம் பெற்றோர் தமது அடையாளக் கார்ட்டுடன் தமது அலுவலகம் வரும்படி யாழ். சோனகதெரு கிராம சேவை அலுவலர் அ. அலெக்ஸீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பின்வரும் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் அல்லது உத்தரவு பெற்ற வியாபாரிகளிடம் ஏற்கனவே இலங்கை அரச நிவாரணம் பெற்றோர் பின்வரும் திகதிகளில் அடையாளக் கார்ட்டுடன் தம்மை வந்து சந்தித்து இந்திய நிவாரணத்துக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுச் செல்லுமாறு கிராம சேவை அலுவலர் கோரி உள்ளார்.

அவை வருமாறு:-

1. காதி அபூபக்கர் வீதியில் உள்ள யாழ். ப.நோ.கூ.சங்ககிளை 30- 11-8-87.
2. பீச் றோட், ஆர். குணரத்தினம் (உத்தரவு பெற்ற வியாபாரி) — 11-8-87.
3. புதுப்பள்ளி சந்தி- யாழ் ப. நோ .கூ. சங்க கிளை இல. 3 — 12-8-87
4. நாவலர் றோட், ஜனாப் எஸ். எம். மீரான் சாகிப் (உத்தரவு பெற்ற வியாபாரி) — 13-8-87
5. நாவலர் றோட், ஜனாப் எம்.எம். வாதூத் (உத்தரவு பெற்ற வியாபாரி) — 13-8-87
6. புதிய சோனக தெரு - யாழ்.ப.நோ.கூ. ச. கிளை இல. 3சி — 14-8-87
7. வெள்ளாந் தெரு- கிளை இல. 7 யாழ். ப. நோ.கூ.ச. — 15-8-87
8. ஒட்டுமடம் கிளை இல. 4 யாழ். ப. நோ. கூ. ச. — 15-8-87

மக்கள் முகம்

### யாழ் ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ் போதனா வைத்தியசாலை தொழிலாளர் சங்க நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர்: எஸ் விக்கினேஸ்வரன், உபதலைவர், ஏ. தெய்வேந்திரம்: செயலாளர்: எம். ஈழத் தமிழ்மணி. உபசெயலாளர்: எஸ். சண்முகலிங்கம், பொருளாளர்: கே. வாமதேவன்.

கணக்குப் பரிசோதகர்: கதிர். மகேஸ்வரன், நூலக பொறுப்பாளர்: ஆர். இராஜகோபால், ஆ. இரத்தினராஜா, ஓய்வு விடுதிப் பொறுப்பாளர்: எஸ். விஜயரத்தினம், ஜே. அருள்நேசன்.

பொது வைபவப் பொறுப்பாளர்: எஸ். இராஜேந்திரம், எம். மதிவதனன், காப்பாளர்: எஸ் ஜீவரத்தினம். (இ-ஒ-10)

### காணி பிடிப்பதில் போட்டி!

குருநகர், ஆக. 11

யாழ்ப்பாணம் ரேசடிக்கும், சரிக்கோப்புக்கும் இடைப்பட்ட அலுப்பாந்திப் பகுதியில் யாழ். மாநகரசபைக்கும் அரசுக்கும் சொந்தமான காணிகளை மீண்டும் பொதுமக்கள் பிடித்துக் கொள்வதில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ் - கோட்டை இராணுவம், கோட்டைக்குள் குடிவர முன்பாக இப்பகுதிகளில் பொது மக்கள் அத்துமீறிய குடியேற்றம் செய்திருந்தனர்.

இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து அவ்விடங்களைக் கைவிட்டுச் சென்றிருந்தவர்கள் மீண்டும் அமைதி நிலைமை தோன்ற தமது பழைய இடத்துக்குதிரும்பத் தொடங்கி உள்ளனர்.

புதிதாக வந்து காணிகளைப் பிடிப்பவர்களுக்கும், ஏற்கனவே அப்பகுதிகளில் இருந்தவர்களுக்கும் இடையே காணிகளைச் சுவீகரித்துக் கொள்வதில் தகராறுகளும் ஏற்பட்டுள்ளன. (உ- 51)

## 182 ஆம் நினைவஞ்சலி



மலர்வு: 06 - 08 - 1959 உதிர்வு 11 - 02 - 1987

**திருமதி மலராசினி கமலநாதன்**

[பாவற்குளம் Unit 4 ம. வித்தியாலய ஆசிரியையும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விவசாயபீட 2ஆம் வருட மாணவியும்]

11-2-1987 இல் பரந்தனில் அகால மரணமடைந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 182 ஆம் நாள் நினைவாகப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், தந்தை, தாய், மாமன், மாமி, சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனியார், உற்றார், உறவினர்கள்.

2 ஆம் வட்டாரம், நயினாதீவு.

No. 23 UC குவாட்டர்ஸ் மன்னார் றோட், வவுனியா.


## ஆள் தேவை

குளிரூட்டப்பட்ட வீடியோ கிளப்பிற்கு ஒரு பெண்பிள்ளை தேவை. நடுத்தர வயதுடைய அழகுள்ளவரும் வியாபாரம் செய்யக் கூடிய தன்மையும் உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது. தங்குமிட வசதியுள்ளவர்கள் நல்லது. அப்படி இல்லாதவர்களுக்கும் ஒழுங்கு செய்யலாம். பொறுப்புக்கள் இல்லாதவர்கள் நன்று விண்ணப்பதாரிகள் கடிதமூலமோ, நேரிலோ தொடர்பு கொள்ளலாம்.

**ஷோபனுஸ்**

வீடியோ சென்டர்

கந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா.

★ வியாபாரம் பெருக விளம்பரம் செய்க ★


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உடலைப் போற்ற உனக்கு உணவு தேவை. அது போல ஆத்மாவுக்கு ஸ்தோத்திரங்கள், கீர்த்தனை, தியானம் முதலியவைகள் நல்லுணவுகள்.

— சுவாமி சிவானந்தர்


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
11.8.1987 த.பெ.இல: - 23


# கொள்ளையர் கொட்டம் அடக்குவார் இல்லையா?

எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பது பழமொழி

நிச்சயமாக, வீட்டுச் சொந்தக்காரன் அப்படிச் செய்தால் லாபம் தான். ஆனல் எரிகிற வீட்டில் அடுத்தவன் வந்து பிடுங்கினல் ......? சொந்தக்காரனுக்கு எப்படியும் நட்டம் நட்டமே.

அதாவது வீடு எரிந்து போவது எப்படி நட்டத்தை உண்டாக்குமோ அதே போல அடுத்தவர் பிடுங்கிக் கொள்வதாலும் சொந்தக்காரனுக்கு லாபம் எதுவும் ஏற்படப்போவதில்லை.

இதே பரிதாப நிலை, யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரசபடைகளின் முகாம்களுக்கு அருகில் உள்ள பிரதேசங்களில் வாழ்ந்தவர்களுக்கு ஏற்பட்டிருகிறது

ஸ்ரீலங்கா அரச படைகள் இழைத்த கொடுமைகளால் படை முகாம்களுக்கு அருகில் வாழ்ந்தவர்கள், தங்கள் சொந்த உறைவிடங்களை விட்டு வெளியேறி அகதிகளாக வேறு இடங்களுக்குக் குடிபெயர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது எல்லோருக்கும் தெரிந்த விவகாரம்.

தங்கள் உயிர்களை மட்டும் காப்பாற்றினல் போதும் என்ற நோக்கோடு, வாழ்நாள் முழுவதும் பாடுபட்டுத் தேடிய உடைமைகளை கைவிட்டுவிட்டு ஓடியவர்கள் அவர்கள்.

மக்கள் ஓடிய பிறகு, இராணுவத் தாக்குதல் என்ற பெயரில் நூற்றுக் கணக்கான வீடுகள் அந்தப்பகுதிகளில தரைமட்டமாக்கப்பட்டன. தாக்குதலின் பின்னர் படையினரே அந்த வீடுகளைச் சூறையாடியதும் உண்டு.

குறிப்பாக, வடமராட்சி, வலிகாமம் வடக்கு, அச்சுவேலி ஆகிய பகுதிகளில் மக்கள் விட்டுச் சென்ற வீடுகளில்இராணுவம் குடியிருந்தது.

இப்போது யாழ். குடாநாட்டில் உள்ள அநேக படை முகாம்களில் இருந்து ஸ்ரீலங்கா துருப்புக்கள் வெளியேறிவிட்டன. அதனல் அவர்கள் மக்களின் வீடுகளில் வாழ்க்கை நடத்திய படலம் நீங்கிவிட்டது.

இப்போது அந்தந்தப் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். முற்றுகச் சேதமான வீடுகள் போக, அரை குறையாகச் சேதமான வீடுகள், அரை குறையாக முதலில் சூறையாடப்பட்ட வீடுகள் ஆகியவை இப்போது மீண்டும் முற்றுகச் சூறையாடப்படுகின்றன!

இராணுவத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், இரண்டாவது சூறையாட்டத்தை நடத்துபவர்கள் எம்மவர்கள்! எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என எண்ணி, தமது சொந்த மக்களின் மனம் வேக வைப்பவர்கள் எம்மவர்கள்!!

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல, நொந்து போன சொந்த மக்களை மேலும் அபலைகளாக்கும் இந்த எம்மவர் கூட்டம் எது? எமக்கிடையே உள்ள கயவர்கள் கூட்டம்! மற்றவன் சொத்தை அபகரிக்க விழைந்த கள்ளர் கூட்டம்— திருடர் கூட்டம்!!

ஸ்ரீலங்கா அரச படைகள் வைத்துச் சென்ற பொறி வெடிகள் தரவல்ல மரண ஆபத்தையும் பொருட்படுத்தாது, அவர்கள் விட்டுச் சென்ற மிச்ச சொச்சம் எல்லாவற்றையும் இந்த உள்நாட்டுத் திருடர்கள் கொள்ளை அடிக்கிருர்கள்.

பூனை இல்லாவிட்டில் எலிகள் கொண்டாட்டம் கொள்வது உண்டு. இந்த உள்நாட்டுக் கொள்ளையர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க பொலீஸும் இல்லை; போராளிகளும் இல்லை. அதனல் அந்தக் கொள்ளையர்கள் கொட்டம் அடிக்கிருர்கள்.

உறவு இழந்து, உடைமை இழந்து தவிக்கும் சொந்த மக்களின் சொத்தைச் சூறையாடும் இவர்களை "கமுவில் ஏற்றிக் காம்வாலையால் சுடவேண்டும்" இந்தக் கொள்ளையர்களுக்கு அப்படிப் பெரிய தண்டனையை மக்களாகவே கொடுத்தால் மற்றவர்கள் நிச்சயம் திருந்தி விடுவார்கள்.

இந்தப் பாவிகள் கூட்டத்தை, அவமானச் சின்னங்களை, கல்நெஞ்சர்களைக் கண்டு பிடிக்க அந்தந்தப் பகுதிகளில் காவற்குழுக்களை ஏற்படுத்த வேண்டும். பிரசைகள் குழுக்கள் மற்றும் சமூக நல இயக்கங்கள் இதில் அக்கறை காட்ட வேண்டும்.

சிவில் நிர்வாகம், பொலீஸ் செயற்பாடுகள் மீண்டும் தொடங்கும்வரை பார்த்துக் கொண்டிருந்தால் உள்நாட்டுக் கொள்ளையர், மேலும் தலை தூக்கி விடுவர்.

திருட்டும் கொள்ளையும் இப்பிரதேசத்தில் மேலோங்கி விடும். இது அவர்களுக்கு மட்டுமன்றி முழுச் சமுதாயத்துக்குமே அவமானத்தைத் தேடித் தரும்.

### லிபியா விமானத் தாக்கு

திரிபொலி, ஆக. 10

சாட் நாட்டின் வடபகுதி மீது லிபியா விமானத் தாக்குதலை மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

லிபிய படைகள் மீது சாட் கடந்த சனிக்கிழமை நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக லிபியாவின் விமானத் தாக்குதல் அமைந்திருக்கின்றது. (இ-எ)

### ஈரான் கண்டனம்

தெஹ்ரான், ஆக 10

மேற்கு ஜெர்மன் கிழக்கு ஜெர்மன் ஆகிய நாடுகள் ஈரான் ராஜதந்திரிகளை வெளியேற்றியது குறித்து ஈரான் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது

தீவிரவாதச் செயல்கள் தங்கள் நாடுகளில் பரவக் கூடும் என்ற அச்சத்தினல்தான் இந்த நாடுகள் ஈரான் ராஜதந்திரிகளை வெளியேற்றின என்று அறிவிக்கப்படுகின்றது. (இ-எ)

### சம்பளத்தை வழங்க கோரிக்கை

புதுடில்லி, ஆக. 10

வரட்சி நிவாரணத்துக்கு இந்திய எம். பிக்கள் எம். எல். ஏக்கள், எம் எல் சிக்கள் ஆகியோர் தங்கள் ஒருநாள் சம்பளத்தை வழங்க வேண்டும்.

— இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி வேண்டுகோள் விடுத்தார்.

வரட்சி நிவாரணப் பணி பற்றிக் கவனிக்க திரு கமலாபதி திரிபாதி தலைமையில் கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது (உ-எ)

# சக்மா அகதிகள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும்

## திரிபுரா முதலமைச்சர் ராஜீவிடம்வலியுறுத்து

அகர்தலா, ஆக. 10

சக்மா அகதிகள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்படி பங்களாதேஷை இந்தியா வற்புறுத்த வேண்டும்.

திரிபுரா முதலமைச்சர் நிருபன் சக்கரவர்த்திஇப்படிச் சொன்னர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பங்களாதேஷின் சக்மா பகுதியில் இருநது சுமார் 50 ஆயிரம் அகதிகள் திரிபுரா வந்திருக்கின்றனர்.

பங்களாதேஷ் அரசுப் படைகளினதும முஸ்லிம் கிராமவாசிகளினதும் துன்புறுத்தல் காரணமாகவே சக்மா அகதிகள் திரிபுரா வருகின்றனர்

அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே சக்மா, அகதிகள் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி இந்தியா பங்களாதேஷைக் வற்புறுத்திச் செல்ல வேண்டும் —

இப்படி முதலமைச்சர் சக்கரவர்த்தி தெரிவித்தார்.

(இ எ)

### வெளி உலகில்

*சங்கராச்சாரிய ஸ்வாமி கூறுகிறுர்

## மதமாற்ற தடைச் சட்டம் கொண்டு வரும் கட்சிகளுக்கே மக்கள் வாக்களிக்க வேண்டும்

மதுரை, ஆக. 10

மதமாற்றங்களைத் தடை செய்யும் சட்டத்தைக் கொண்டு வரும் அரசியல்வாதிகளுக்கே மக்கள் இனிமேல் வாக்களிக்க வேண்டும்.

சிருங்கேரி சாரதா பீடம் சங்கராச்சாரிய ஸ்வாமிகள் முன்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

மதுரையில் விஷ்வ இந்து பரிஷத் தொண்டர்களின் ஐந்து நாள் பயிற்சி வகுப்புக்களைத் தொடக்கி வைத்து ஸ்வாமிகள் பேசினர்.

மதமாற்றங்கள் கவலையைத் தருகின்றது. பாரதமாக இந்தியா என்றும் இருக்க வேண்டும். சனதன தர்மம் பாதுகாக்கப்பட வேண்டும். பசுவதை தடை செய்யப்பட வேண்டும் இந்துமதமும் கடவுள் ஒருவரே என்றுதான் கூறுகின்றது.

இப்படி சிருங்கேரி சங்கராச்சாரிய ஸ்வாமிகள் சொன்னர்.

(இ-எ)

## புதிய அரசியல் கட்சி நிறுவும் முயற்சியில் முன்னுள் மந்திரி வி. பி சிங்

ஹைதராபாத், ஆக 10

இந்திரா காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட முன்னுள் நிதி அமைச்சரும் பாதுகாப்பு அமைச்சருமான திரு, விஸ்வநாத் பிரதாப் சிங் புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இப்படி புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது

அண்மையில் திரு. சிங் ஆந்திர முதலமைச்சர்என் ரி. ராமராவுடன் நீண்ட நேரம் பேச்சுக்களை நடத்திஞர்.

இப்பேச்சுக்களில் ஹரியாஞ முதலமைச்சர் தேவிலால், ஜனதாக் கட்சித் தலைவரான பஜ் பட்ஞயக், ஜனதாக் கட்சி உபதலைவர் திருமதி விஜயராஜி சிந்தியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பேச்சுக்களின் பின்னர் ஆந்திர முதலமைச்சர் என். ரி. ராமராவ் கருத்து வெளியிடுகையில் "உத்தரப்பிரதேச மாநிலத்தில பலமான அரசியல் கட்சி ஒன்றை திரு வி பி சிங் தோற்றுவிக்கவேண்டும்" எனறு கேட்டுக்கொண்டார்.

(இ-எ)

### ஹிட்லர் வரைந்த ஓவியம்

பொன் ஆக. 10

சர்வாதிகாரி அடல்ப் ஹிட்லர் தன்னைத் தானே பார்த்து வரைந்த ஓவியம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஹிட்லர் வரைந்த ஒரே ஒரு ஓவியம் இதுவே என்று அதனைக் கண்டுபிடித்த பிரபல மேற்கு ஜெர்மன் சரித்திர ஆசிரியர் வெர்னர் மேஸர் தெரிவித்தார்.

1925 ஆம் ஆண்டில் 36 வயதாக இருந்த போது ஹிட்லர் தன்னைத் தானே பார்த்து இந்த ஓவியத்தை வரைந்து கொண்டார்

1960 இல் வியன்னவில் நடந்த ஏல விற்பனை ஒன்றில் ஆஸ்திரியக் குடும்பம் ஒன்று இந்த ஓவியத்தை வாங்கியது

ஆஸ்திரிய வங்கி ஒன்றில் இந்த ஓவியம் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

ஐந்து லட்சம் டாலருக்கு இந்த ஓவியத்தை வாங்கச் சிலர் முயற்சிக்கின்றனர்

(இ-எ)

### வேலை நிறுத்தம்

கேட்டவுன், ஆக 10

தென் ஆபிரிக்காவில் சுமார் இரண்டு லட்சம் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்து வருகின்றனர் (இ எ

# இந்திய--இலங்கை ஒப்பந்தம்: அமெ.-சோவியத் கருத்து மோதல்!

இந்திய – இலங்கை ஒப்பந்தம் பற்றி சோவியத் யூனியனின் உத்தியோகபூர்வ நாளிதழ் 'பிராவ்டா' வெளியிட்ட கருத்தும் அதற்கு அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட மறுப்பும் இங்கு பிரசுரமாகின்றன.

### பிராவ்டா கருத்து

ஜூலை 29 இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தம் இலங்கைத் தீவை கடந்த நான்கு ஆண்டுகளாகச் சீரழித்து வந்த இன வன்செயல்களுக்கு முடிவுகாண வைத்துள்ளது.

70 சதவீதமான சிங்களவரும் 20 சதவீதமான தமிழரும் பல்லாண்டுகளாக நட்புறவுடன் வாழ்ந்து வந்தனர். அவர்களின் சமயங்கள் (பௌத்தம் – இந்து) சரித்திரகாலத் தொடர்புடையவை.

ஆனல் கடந்த 10 ஆண்டுகளாக இந்த இரண்டு பெரிய இனங்களின் உறவுகள் மோசமடைந்து வந்தன.

நாட்டை சிங்கள நாடு, தமிழ் நாடு என்று இரண்டாகப் பிரிப்பதன் மூலம் தான் இதற்குப் பதில் காண முடியும் என்று தீவிரவாத தமிழ் அமைப்புக்கள் நினைத்தன.

தமிழருக்கான தனி நாட்டை 'தமிழ் ஈழம்' என்று அந்த அமைப்புக்கள் அழைத்தன.

தமிழர் பகுதியில் அரசுப்படைகள் நடத்திய அக்கிரமமும் பிரிவினை வாதிகளின் வன்செயல்களும் துன்பத்தை அதிகரித்தன.

ஒன்றரை லட்சம் பேர் தென் இந்தியாவுக்கு அகதிகளாக ஓடினர். சுமார் ஆறுயிரம் மக்கள் உயிரிழந்தனர்.

இனப்பிரச்சினையினல் நாடு பிளவுபடும் ஆபத்துடன் அபாயகரமான சர்வதேசப் பிரச்சினைகளையும் குறிப்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்படுத்திவிட்டன.

தென் இந்தியாவில் ஐந்து கோடித் தமிழர் வாழ்வது இலங்கையில் பெரும் தாக்கத்தை உருவாக்கிவிட்டது.

அகதிகள். இலங்கைத் தமிழத் தலைவர்கள் அரசியல் காரணங்களுக்காக வெளியேறியோர் ஆகியோருக்குத் தமிழ்நாடு தஞ்சம் அளித்தது.

இந்த நிலையைப் பயன்படுத்தி இலங்கையினுள் வெளிநாடுகள் சில தலையிடத் தொடங்கின.

பாகிஸ்தான், பிரிட்டன். இஸ்ரவேல் ஆகிய நாடுகளின் இராணுவ ஆலோசகர்கள் இலங்கையில் காணப்பட்டனர்.

கொழும்பு அரசாங்கத்தின் கஷ்ட நிலையைப் பயன்படுத்தி ஏகாதிபத்திய சக்திகளில் முதலாவதாக அமெரிக்கா கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளமான திருகோணமலைத் துறைமுகத்தைப் பிடிக்க முனைந்தது.

இலங்கைப் பிரச்சினையை வைத்து இந்தியாவைப் பலவீனப்படுத்தவும் இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளை எதிரிநாடுகளாக மாற்றவும் முயற்சிக்கப்பட்டன.

இதை உணர்ந்து புதுடில்லி இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முயற்சித்தது.

அந்த அரசியல் தீர்வு இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதாகவும்,

தீவில் வாழும் தமிழர்களின் அரசமைப்பு ரீதியான உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் இருக்க வேண்டும் என்று புதுடில்லி விரும்பியது.

இந்திய -இலங்கை ஒப்பந்தம் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு தனி மாகாண சபையாக இயங்க வழி வகுத்துள்ளது.

வன்செயல் நிறுத்தம், போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்தல், அகதிகள் தாயகம் திரும்புதல் – ஆகியவற்றுக்கும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் வழி வகுத்துள்ளது.

ஒப்பந்தத்தை அமுல் செய்ய ஜனதிபதி ஜெயவர்த்தனவின் அழைப்பின் மீது இந்திய ஆயுதப் படையினர் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

ஆயுதக் கடத்தலை நிறுத்த இந்திய யுத்தக் கப்பல்கள் இலஙகையின் கரையோரப் பகுதிகளைக் காவல் புரிகின்றன.

போராளிகள் 26 இடங்களில் ஆயுதங்களை ஒப்படைத்து வருகின்றனர்.

இலங்கை ஜனதிபதி கோரும்போது இந்தியத் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்படும். இறுதியாக இந்திய- இலங்கை ஒப்பந்தம்—

★ மூன்றுவது நாடு ஒன்றுக்கு திருகோணமலைத் துறைமுகம் கொடுக்கப்படுவதைத் தடுக்கின்றது

★ வொய்ஸ் ஆப் அமெரிக்கா ஒலிபரப்பு சேவைகளைக் கட்டுப்படுத்துகின்றது

★ பாகிஸ்தான், இஸ்ரவேலிய இராணுவ ஆலோசகர்களை இலங்கையில் இருந்த திருப்பி அனுப்ப வழி செய்துள்ளது.

★ இலங்கைப் பிரச்சினையை ஏகாதிபத்திய சக்திகள் தங்கள்நலன்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுத்துள்ளது.

### அமெரிக்கத் தூதர் கருத்து

'பிராவ்டா' வின் கருத்தை மறுத்து அமெரிக்க அரசின் சார்பில் அதன் கொழும்புத் தூதர் ஜேம்ஸ் ஸபெயின் அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அந்த அறிக்கை வருமாறு:

'பிராவ்டா' வின் குற்றச்சாட்டு இலங்கைப் பத்திரிகைகளில் வெளி வந்தது.

இலங்கையுடனன அமெரிக்காவின் உறவு தெளிவானது. 200 ஆண்டு கால நட்புறவு அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்து வந்துள்ளது.

இந்த நட்புறவில் திருகோணமலையில் அல்லது இலங்கையின் வேறு எந்தப் பகுதியிலும் இராணுவத்தளம் அமைக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)



### பொய்யாமொழி

குறள்:
பெருங்கொடையான் பேணன் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

பொருள்:
பெரிய கொடையாளியாகவும் சினமற்றவனுகவும் ஒருவன் இருந்தால், அவனைப் போல் சுற்றத்தாரை உடையவர் உலகத்தில் யாரும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## அருளை அள்ளித் தருவான்!

இன்றே எங்கள் ஆவியையும்
இளைத்து நொந்த உடலதையும்
வென்றே பெற்ற உடைமையையும்
வேலன் தாளில் வைத்திட்டால்
குன்றே அனையான் நல்லூரைக்
கோயில் கொண்ட ஞானத்தின்
கன்றே எம்மைக் கை தூக்கி
நன்றே கரையிற் சேர்த்திடுமே!

கரையெங் கென்று தெரியாமல்
கடலில் புயலில் அகப்பட்டுத்
திரையொன் றதனுல் எற்றுண்டு
சிதைந்து போகும் [illegible] நாம்
தரையில் உயர்ந்த தலமாகும்
தார்மார் பனுறை நல்லூரை
விரைவிற் சேர்வோம் அதனுலே
விடுதி பெறுதல் நிசயமாம்!

நிசமே சொல்வேன் நன்னெஞ்சே
நீறும் அக்கம் ஆறெழுத்தும்
வசமே கொண்டு [illegible] நல்லுலகும்
வடிவேற் பெருமான் நமைநோக்கி
சஜமே முகமாய்க் கொண்டபிரான்
கையில் வளரும் [illegible]வான்
அஜவா கனனுய் நல்லூரான்
அருளை அள்ளித் தருவானே!

-- நாக பரமசாமி

## தென் ஆசிய பிராந்திய அமைதிக்கு வழிகோலிய ஒப்பந்தம் இது!

### இந்தியப் பிரதமர் கூறுகின்றுர்

பம்பாய், ஆக 9

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தென் ஆசியப் பிராந்தியத்தின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் அடிகோலியிருக்கிறது.

பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த சனிக்கிழமை பம்பாய் இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் மத்தியில் பேசுகையில் முன் கண்டவாறு குறிப்பிட்டார்.

உலக வல்லரசுகளின் கண்களைத் திறக்கும் ஒப்பந்தம் இது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைதியைக் குலைக்கும் சக்திகளுக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஓர் எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

— இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார். (உ-எ)

## இன்று நல்லூரில்

யாழ்ப்பாணம், ஆக 11

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கோயில் மேற்கு வீதியிலுள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் சம்பூர்ண இராமாயண விரிவுரை நடைபெற்று வருகின்றது.

சிவ வை நித்தியானந்தசர்மா அவர்களால் இன்று மாலை 6-30 மணியளவில் 'கைகேயி வரம்' என்னும் பொருளில்கம்பராமாயண விரிவுரை இடம்பெறும். (இ)

### மீண்டும் இந்திய நிவாரணம்

தற்போது வடமராட்சியில் திரும்பியுள்ள அனைத்து மக்களுக்கும் இந்திய நிவாரணம் சங்கக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-160)

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

11 - 08 - 1987 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

**கலைப்பிரிவு ஆண்டுத்தேர்வு 1987.**

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் மாணவரிடமிருந்து 30-08-87 இற்கு முன்னதாகக் கோரப்படுகின்றது. பரீட்சை அக்டோபர் மாதம் நடுப்பகுதியில் நடைபெறும்.

—பதிவாளர்

## அந்தியேட்டி அழைப்பிதழ்

**திருமதி மனோன்மணி செல்வவிநாயகம் (குட்டி அக்கா)**



மறைவு 13.7.87

காலஞ் சென்ற செல்வவிநாயகத்தின் மனைவியும் எங்கள் தாயாருமாகிய செ. மனோன்மணி (குட்டிஅக்கா)யின் அந்தியேட்டி, வல்வெட்டித்துறை ஊறணி கடற்கரையில் புதன்கிழமை (12- 8- 87) காலை 6 00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
மகள்மார், க. சந்திரகாந்தி, க. சொர்ணகாந்தி, ந. இரத்தினகாந்தி.

வல்வெட்டித்துறை.

## ஆறுவது ஆண்டு நினைவஞ்சலியும் அன்னாரின் வாழ்க்கைப் பாதையும்

## அமரர் வே. அம்பலவாணர் அவர்கள்

(மிருதங்க வித்துவான்)

௧௧ 11 . 8 . 1987



இசையுலக மேதை அம்பலவாணர் மறைந்து இன்றுடன் ஆறு வருடங்கள் ஆகிவிட்டன. 11 - 10 - 1927 இல் தோன்றி இளமையிலேயே மிருதங்கம் பயின்று தலைசிறந்த கலைஞரானார். 'மிருதங்கம்' என்றால் நாச்சிமார் கோவிலடி அம்பலவாணரா? எனக் கேட்குமளவுக்குப் புகழ் பெற்றார். 1947 இல் ஆவரங்கால் பொன்னுச்சாமியிடமும் பின்பு கோவிந்தபிள்ளையிடமும் பயின்ற இவர், 1949 இல் இந்தியா சென்று திரு. A S. இராமநாதனைச் சந்தித்து ஆசி பெற்றுப் பின்பு ஈழம் வந்து அவரிடமே பாடங் கற்றார் இவர் கச்சேரிக்குப் பக்க வாத்தியம் வாசிக்கும் பாணியே தனி. கச்சேரிகளைக் களை கட்டச் செய்வதில் சமர்த்தர். ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையின் அருளை முன்னிட்டுத் தம் வாழ்வையே சங்கீதத்துக்கு அர்ப்பணித்தவர் அம்பலவாணர். நல்ல மாணவ பரம்பரையொன்றை உருவாக்கினார் தம்மிடம் பயின்ற திறமை மிக்க மாணவர்களை அரங்கேற்றுவித்து இசையுலகுக்கென வழங்கினார் இவர் 1952 முதல் 1980 வரை யாழ் ரஸிகரஞ்சன சபாவிலே மிருதங்க ஆசிரியராகப் பணிபுரிந்தார் 1954 இல் இலங்கை வானொலியில் தாள வாத்தியக் கச்சேரியில் சிறப்பாக வாசித்தார். பொது இடங்கள், ஆலயங்கள், பாடசாலைகள், கிறிஸ்தவ தேவாலயம், அகில இலங்கை வித்வத் சபை, இளங் கலைஞர் மன்றம், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், தென்மராட்சி சாவகச்சேரி இசைக் கல்வி இசைத் தமிழ் மன்றம், நல்லை ஆதீனம், வடமராட்சி பருத்தித்துறை முத்தமிழ் மன்றம், மாவை இசைக் கலை மன்றம் ஆகியவற்றின் இசை விழாக்களில் இசை விருந்தளித்தார். இன்று இசைக்கலை பயின்று கொண்டிருக்கும் மாணவ மாணவியர்க்கு இவரது வரலாறு பிரதான அம்சமாகும். நாச்சிமார் கோவிலடி நாதமணியாகத் திகழ்ந்த வாணர் இன்று நம்மிடையே இல்லை. 19-7-1981 இல் அமரராகி விட்டார். அவரது புகழ் மங்காத ஒளி விளக்காய்ப் பிரகாசித்து நிற்கிறது. இசைப்பணிக்கே இன்னுயிரீந்த இவரது ஆத்மா இறைவனடியில் இனிதே இருக்க இறைஞ்சுகின்றோம். ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

ஆத்மா சாந்தியடைவதாக!

இங்ஙனம்
அன்னாரின் பிரிவால் துயருறும்
ஸ்ரீ ரகுராம ஜெயம்
சந்தானலட்சுமி, சரஸ்வதி.

இல. 2, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## இந்திய---

(3ம்-பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் இடம்பெறவில்லை.

கடந்த வாரம் கைச்சாத்தான இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை வரவேற்ற நாடுகளில் அமெரிக்கா முதலாவதாக இருந்தது.

'பிராவ்டா'வின் கருத்து அழிவை நோக்கமாகக் கொண்டுள்ளது; சந்தேகத்தையும் முரண்பாட்டையும் தோற்றுவிக்கும், எண்ணத்தையே 'பிராவ்டா'வின் கருத்து பிரதிபலிக்கின்றது

இல்லாவிடில் 'பிராவ்டா'வின் குற்றச்சாட்டு பிரமையில் எழுந்தது என்று தள்ளிவிட முடியும்.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அமைதியும் ஒற்றுமையும் தோன்ற வேண்டும் என்று அனைவரும் பாடுபடும் நேரத்தில் 'பிராவ்டா' குற்றச்சாட்டு வெளிவந்துள்ளது.

இப்படி அமெரிக்கத் தூதரின் அறிக்கை தெரிவித்தது. (இ-எ)

## மட்டக்களப்பில் 25 தமிழர் விடுதலை

மட்டக்களப்பு, ஆக. 11

மட்டக்களப்பில் உள்ள அதிரடிப் பொலீஸ் படைமுகாம்களில் இருந்து நேற்று 25 தமிழர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பில் உள்ள அதிரடிப்படை முகாம்களில் இன்னும் சுமார் முந்நூறு தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

## வெல்வில் ஆலய மகோற்சவம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 11

சங்கானை, வெல்வில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை (12-8-87) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா இம் மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், தீர்த்தோற்சவம் அடுத்த நாளும் இடம்பெறும்.

முன்னரே நடந்திருக்க வேண்டிய வருடாந்த உற்சவம் குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

## நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
## உதயன் நடத்தும்
# அதிர்ஷ்டப் பயணப் போட்டி-87


★ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரைசொகுசுபஸ் பயணம்
★ கொழும்பு கிறீன்லன்ட்ஸ் ஹோட்டலில் ஒருநாள் ஓய்வு
★ எயர் லங்கா விமானத்தில் இருவருக்கு பழநிபோய் - வரும் பயணச்சிட்டு
★ பழநியில் உயர்தர ஹோட்டலில் தங்கும் வசதி
★ பழநி முருகனை 3 நாட்கள் தங்கி வணங்கும் பாக்கியம்.
★ கைச்செலவுக்கு 50 அமெரிக்க டொலர்கள்.
● 2 ஆம் 3 ஆம் பரிசுகளாக தங்க மோதிரமும், காஞ்சிபுரம் பட்டுச்சேலையும்.

## இவற்றைப் பெறப்போகும் அதிர்ஷ்டசாலிகள் யார்?

அந்த அதிர்ஷ்டசாலி நீங்களாகவே இருக்கச் செய்யவேண்டியது இவ்வளவு தான்.

1. உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் நாளாந்தம் பிரசுரமாகும் 'அதிர்ஷ்டப் பயணப் போட்டி 87' கூப்பன்களை கத்தரித்து எடுக்க வேண்டும்.
2. கூப்பன்களில் உள்ள கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகளை அதற்கு என ஒதுக்கப்பட்ட இடைவெளிகளில் எழுத வேண்டும்
3. உங்கள் பெயர் முகவரிகளை தகுந்த இடங்களில் நிரப்பிக் கூப்பனை நல்லூர் ஆலய வீதிகளில் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இடவேண்டும். அல்லது தபால் மூலம். 'அதிர்ஷ்டப் பயணப் போட்டி 87'' உதயன் பணிமனை, 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு**
**உதயன் நடத்தும்**
**அதிர்ஷ்டப் பயணப் போட்டி**



பெயர்: ______________________

முகவரி: ______________________

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?
......................................

உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
......................................

நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?
......................................

சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?
......................................

● உதயன் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் இந்தப் போட்டியல் கலந்து கொள்ள முடியாது.

## பிரயாண ஒழுங்கு குவைத் (Petrolium Refainary)

குவைத் நாட்டிற்கு பின்வரும் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட இருப்பதால் தகுதியாயுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

SUPERVISORY STAFF
1. Welding Inspector (Exp. 10 Years) 100 K. D. with Lloyd's or Equal Cert,
2. Piping Foreman (Exp. 10 Years) 75 K. D.
3. Duct Foreman (Exp. 10 Years) 75 K. D.
4. Engineers (a) Mechanical 175 K. D (Exp. 10 Years)
5. (b) Electrical (Industrial) 175 K. D.

SKILLED LABOURER — 8 Years Exp.
1. High Preasure Pipe Welders 75 K D. (With Lloyd's or Equal Cert)
2. Pipe Fabricator and Fitters 65 K. D,
3. Duct Fitters 65 K. D.
4, Duct Fabricators 65 K. D.
5. Electrician (Industrial Wiring 65 K. D.
6. Safety Officer and Nurse 80 K. D,

Semi Skilled 3 & 4 Years Exp.
Pipe Fabricators and Fitters Pipe Weldnrs 60 K. D

UN SKILLED — LABOURER
1. For General Carring, Loading, Unloading of Heavy Equipments and Pipes
Food Allowance 25 K. D. Each — Contract Period 2 Years

முக்கிய குறிப்பு!-
13 ஆம் திகதி காலை நேர்முகப்பரீட்சைக்காக புறப்பட இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

✶ கடந்த மாதம் 29ம் திகதியும் (29-06 87)
09ம் திகதியும் (09 - 07 - 87)

எமது முகவர் நிலையத்தினூடாக குவைத் நாட்டிற்கு (AL TREAKIT TRADING EST- HARBOUR - KUWAIT)
பிரயாணம் செய்தவர்களின் பெயரும் முகவரியும் வருமாறு:-
1. சின்னத்தம்பி சுந்தரம் - (FORKLIFT) நல்லுடை, புத்தூர் கிழக்கு, புத்தூர்.
2. செல்வன் சர்வானந்தராசா (LABOURER J 175052 நவாலி, மானிப்பாய்.
3. குமாரவேலு குமரகுருபரன் (LABOURER) H0 171756 கந்தரோடை, சுன்னாகம்.
4. நாகர் சதிரவேலு விஜயரெத்தினம் (LABOURER H0116216 நவாலி, மானிப்பாய்.
5. தம்பு தர்மராசா (LABOURER) G 0322804 இணுவில் மேற்கு, இணுவில்.
6. பொன்னையா பாலசுப்பிரமணியம் (LABOURER/G0221550 ஸ்ரேசன் வீதி கோண்டாவில்
7. சம்பந்தர் இராஜமூர்த்தி LABOURER H0174990 ஸ்ரேசன் வீதி கோண்டாவில்
8. அப்பர் உமாபதிசிவம் LABOURER H 0334691 கச்சாய் வீதி கொடிகாமம்
9. வேலுப்பிள்ளை சிறீஸ்கந்தராசா LABOURER H 0117574 தவசியா குளம் வவுனியா
10. வேலுப்பிள்ளை பொன்னுத்துரை இரவீந்திரன் (LABOURER) J0130721 இணுவில் கிழக்கு இணுவில்
11. சங்கரப்பிள்ளை ஸ்ரீ குகன் (SUPERVISOR) J 0150023 இடைக்காடு ம. ம. வித்தியாலயம் இடைக்காடு.

முக்கிய குறிப்பு
Bess Engineering Corporation. (THAIVAN) KUWAIT நாட்டிற்கு Pass Port தந்தவர்களும் Free Selection முடிந்தவர்களும் உடனே சந்திக்கவும்

தலைமை அலுவலகம்: **Construction & Development Company Ltd.**
37. S. D. SF. Jeyasinghe Mawatha, Nugegoda

தொடர்பு: (குடாநாட்டின் ஏகப்பிரதிநிதி)

**V. P. பாலசுப்பிரமணியம் (V. P.Bala)**
c/o. N. V. பொன்னுத்துரை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
Licence No. 96

## வடக்கு - கிழக்குக்கு 9 பேர் கொண்ட கவுன்ஸில்?

கொழும்பு, ஆக. 11

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சிவில் நிர்வாகத்தைக் கவனிக்க 9பேர் கொண்ட நிர்வாகக் கவுன்ஸில் ஒன்று நியமிக்கப்படும்.

சிவில் நிர்வாக அதிகாரி ஒருவர் இந்த நிர்வாகக் கவுன்ஸிலுக்குத் தலைமை வகிப்பார்.

இதில் போராளிக் குழுக்களின் பிரதிநிதிகள், சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிப்பார்களா? என்பது தெரியவில்லை.

மாகாணசபைத் தேர்தல்கள் முடியும் வரை இந்த நிர்வாக கவுன்ஸில் பணி புரியும். வடக்குக்குத் தனியான நிர்வாகக் கவுன்ஸிலா, கிழக்குக்குத் தனியான நிர்வாகக் கவுன்ஸிலா அல்லது இரண்டு மாகாணங்களுக்கும் ஒரு நிர்வாகக் கவுன்ஸிலா என்பது தெரியவில்லை.

இப்படி சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கின்றது. (இ-எ)

## போட்டிப்பரீட்சை

கொழும்பு, ஆக. 11

ஆரம்ப பாடசாலை ஆசிரிய நியமனத்துக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும்.

இப்பரீட்சையைக் கல்வி அமைச்சு நடத்துகின்றது.

சுமார் ஐயாயிரம் ஆசிரிய பதவிகளுக்காக சுமார் 85 ஆயிரம் பேர் இப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்துள்ளனர். (இ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்டது. வெளியீட்ட திகதி: 11-08-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Tuesday August 11 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org